1971 டிசம்பர் 11]

கொடுத்து அந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு 2-3 ஆண்டுகள் ஆகும் என்கிற காரணத்தால், 1968-69-ல் 269 பிரிவுகளாக இருந்ததை, 227 பிரிவாக்கி, சென்ற ஆண்டு 200 பிரிவுகளாக அதைக் குறைத்து, இந்த ஆண்டு 160 பிரிவாக ஆக்கியிருக்கிறோம். அடுத்த ஆண்டு தேவையின் அடிப்படையில் இன்னும் பல பிரிவுகள் குறைக்க வேண்டி இருக்கும்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, ஆண்டுதோறும் பயிற்சி பெற்று வரும் ஆசிரியர்களில் அநேகம் பேர்கள் இன்றைய தினம் வேலை கிடைக்காமல், கூலி வேலை செய்து வருகிறார்கள். அப்படி வேலை இல்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு விரைவில் வேலை கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு வேலை தருகிற அளவில்தான் 'அப்ரெண்டீஸ்' ஸ்கீம் வைத்து 6,500 ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முன்பு 269 பிரிவுகள் இருந்ததை மூன்று ஆண்டுகளில் 160 ஆகக் குறைத்து இருக்கிறோம். ஆண்டுதோறும் புதிதாக உருவாகிற பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் தேவைப்படும் என்பதை மனதில் வைத்துத்தான் ஓரளவுக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதைக் குறைத்து வந்திருக்கிறோம். அப்படி வேலை இல்லாமல் இருக்கும் ஆசிரியர்களின் பிரச்னை இன்னும் 2-3 ஆண்டுகளில் தீர்ந்துவிடும், அதற்கான வகையில் அரசு திட்டமிட்டு இருக்கிறது.

Madras Zoo

* 252 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a number of animals in Madras Zoo are suffering from an attack of anthracosis; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். இறந்த ஒட்டகச் சிவிங்கி, புள்ளிமான், சிங்கம் ஆகிய இவைகளில் செய்த பரிசோதனையில் அவைகளின் நுரையீரலில் ஆந்ரோகோசிஸ் என்ற நோய் உள்ளது எனத் தெரிய வருகிறது. நோயின் குணத்திற்குத் தக்கவாறு மாநகராட்சி கால்நடை மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

Dr. H. V. HANDE : Sir, is it not a fact that this particular area where the Zoo is now situated is so cramped that there is not enough space for the proper development of the Zoo. Also, because of the unhygienic conditions prevalent in the Zoo, these diseases take place. So, will the Government come forward to improve the hygienic conditions there or in the alternative to shift it to a better place?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த இடம் மிக நெருக்கடியாக இருக்கிற காரணத்தாலும், ஜனநடமாட்டம் இருப்பதால் இரைச்சல் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தாலும், காட்டிலே தன்னிச்சையாகத் திரிந்து வாழ்ந்த விலங்கினங்கள் இப்படிப்பட்ட இடத்தில் இருந்தால் பெரும் கேடு என்று மருத்துவர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அது மட்டுமல்ல, பக்கத்திலே சென்டிரல் ஸ்டேஷன் இருக்கிற காரணத்தால் ரயில் இன்ஜினிலிருந்து வருகின்ற புகையை அந்த விலங்கினங்கள் சுவாசிக்கிற காரணத்

தால் அவைகளின் நுரையீரலில் நோய் வந்திருக்கிறது என்றும் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த இடத்திலிருந்து அவைகள் மாற்றப்பட வேண்டுமென்று யோசனை கூறியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இரண்டு யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக் கின்றன. ஒன்று, கிண்டி பார்க்குக்குப் பக்கத்தில் 100-150 ஏக்கர் ஒதுக்கப் பட்டால் அங்கே வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்றொன்று, வண்டலூருக்குப் பக்கத்தில் வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். வண்டலூர் சென்னைக்கு வெகுதூரத்தில் இருப்பதால், வெளியிலிருந்து வருபவர்கள் அங்கே சென்று பார்ப்பது கஷ்டம் என்கிற காரணத்தால், கிண்டியில்தான் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அது அரசாங் கத்தின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

மேலக்கட்டளை—சின்னமநாய்க்கன்பட்டி சாலை

*253 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மேலக்கட்டளைக்கு சின்னமநாயக்கம்பட்டியி லிருந்து சாலை அமைக்க வேண்டும் என பொதுமக்களிடமிருந்து கோரிக்கை எப்போது வந்துள்ளது?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு ஒரு கோரிக்கை 3—5—1971 அன்று வந்துள்ளது.

(இ) மேற்படி கோரிக்கை ஊராட்சி ஒன்றியத்தின் பரிசீலனையில் உள்ளது.

வேலாண்டிபாளையத்தில் பாலம்

*254 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பேரூர் பஞ்சாயத்து யூனியனிலுள்ள தெலுங்கு பாளையம் நகரப் பஞ்சாயத்தைச் சேர்ந்த வேலாண்டிபாளையம் என்ற ஊரின் நடுவேயுள்ள பள்ளத்தின் குறுக்கே ஒரு பாலம் கட்ட நிதி உதவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேள்வி கேட்க அனுமதிக்கவில்லை. அடுத்த கேள்வி . . .255.

THIRU K. T. K. THANGAMANI: Has question No. 254 been put?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வினா கேட்கப்பட்டு, விடையும் அளிக்கப் பட்டு விட்டது. மாண்புமிகு உறுப்பினர் அந்த 254-வது கேள்விக்குத்தான் துணை வினா கேட்க எழுந்தார்கள். வேலாண்டிபாளையத்தின் அருகே பாலம்